**ஜூலை – 12**

# TNPSC துளிகள்

- ஆளில்லா வானூர்தி (Unmanned air Vehicle - UAV) மற்றும் பளுவற்ற தோட்டா துளைக்காத வாகனங்களை (Light bullet Broof Vehicles - LBPV) தயாரிப்பதற்கான இந்தியாவின் முதல் தனியார் துறைப் பிரிவு, மத்திய அரசாங்கத்தின் முயற்சியான 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் கோட்டாவிலுள்ள DCM ஸ்ரீராம் இன்டஸ்ட்ரீஸ் குழுவினால் அமைக்கப்பட உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ருவாண்டாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- நடைமுறைக்கு வந்த 76 வருடங்களில் மாநிலங்களவை, இருநாடுகளின் பாராளுமன்றங்களுக்கு இடையேயான பேச்சு வார்த்தையை ஊக்குவிக்கும் நோக்கில் ருவாண்டாவின் செனட்டோடு முதன்முதலாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது.
- இதுபோன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முதல் மாநிலங்களவைத் தலைவர் வெங்கய்யா நாயுடு ஆவார். இந்த ஒப்பந்தம் ருவாண்டா செனட்டின் சிறப்புத்தலைவர் பெர்னாட் மகுஸாவுடன் கையெழுத்தானது.
- பெர்னாட் மகுஸாவின் தலைமையிலான மூன்று செனட்டர் பிரதிநிதிகள் குழு, மற்ற நாடுகளின் மேலவைகளிலிருந்து இந்தியாவிற்கு வருகை தந்த முதல் பிரத்யேக குழுவாகும்.

## INS - சுமித்ரா

- இந்திய கடற்படை கப்பலான INS சுமித்ரா இந்தோனேசியாவில் உள்ள சபாங்க் துறைமுகத்தினுள் நுழையும் முதல் போர்க் கப்பலாகியுள்ளது.
- இந்திய போர்க் கப்பல் INS சுமித்ரா, மலாகா ஜலசந்தியில் பணியில் உள்ளது.
- கமாண்டர் ராஜேஷ் ராணாவினால் வழிநடத்தி செல்லப்படும் INS சுமித்ராவில் 17 என்ற எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் 129 மாலுமிகள் உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆயுதமேந்திய மோதல்களின் நடுவில் குழந்தைகளை பாதுகாப்பதற்காக தீர்மானம் - UNSC (United Nations Security Council)

- ஆயுதமேந்திய மோதல்களின் நடுவில் குழந்தைகளை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை (UNSC) தீர்மானம் 2427-ஐ ஏற்றுக் கொண்டது.
- மோதல்களின் முழு காலகட்டத்திலும் குழந்தைகளுக்கு முக்கிய பாதுகாப்பு அளித்தல், உரிமைகள், நல்வாழ்வு மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கான சட்டரீதியான

கட்டமைப்பு வழங்குவதை தீர்மானம் 2427 நோக்கமாகக் கொண்டுள்ளது.

**THE SIX GRAVE VIOLATIONS AGAINST CHILDREN DURING ARMED CONFLICT:**


- Recruitment and use of children by armed forces or armed groups
- Killing and maiming of children
- Sexual violence against children, especially girls
- Attacks against schools and hospitals
- Abduction of children
- Denial of humanitarian access

**51 non-State armed groups and eight State armed forces** were identified in the UN Secretary-General's blacklist for grave violations against children, which was made public in April 2016.

- ❖ சபையின் 15 உறுப்பினர்களின் ஒருமனதான ஒப்புதலை இத்தீர்மானம் வென்றுள்ளது.

## உலகின் புத்தாக்கத்திற்கான குறியீடு

- ❖ உலகின் புத்தாக்கத்திற்கான குறியீடு (Global Innovation Index - GII) இந்தியாவை உலகிலேயே மிகவும் அதிக அளவிலான புதிய கண்டுப்பிடிப்புகளை கொண்ட நாடு என்ற வகையில் 57வது இடத்தில் வைத்துள்ளது.





- ❖ 2017-ல் இருந்த 60வது இடத்திலிருந்து 3 இடங்கள் வரை தனது இடத்தினை இந்தியா முன்னேற்றியுள்ளது.
- ❖ இது GII-ன் 11வது பதிப்பு ஆகும். இது கார்னல் பல்கலைக்கழகம், INSEAD மற்றும் உலக அறிவுசார் சொத்துகளுக்கான அமைப்பு (WIPO - World Intellectual Property Organisation) ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்பட்டது.

- ❖ மத்திய மற்றும் கிழக்கு ஆசியப் பகுதிகளில் இந்தியா தனது முதல் இடத்தை தொடர்ந்து கைப்பற்றி வருகிறது.
- ❖ 2015-ல் 81-வது இடத்தில் இருந்ததிலிருந்து இந்தியா படிப்படியாக முன்னேறி வருகிறது. இதே நேரத்தில் 2017-ல் 22வது இடத்தில் இருந்த சீனா இந்த வருடம் 17வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ❖ GII உலகத்தர வரிசை ஐக்கிய நாடுகளின் (United Nations) சிறப்பு நிறுவனமான WIPO-னால் வெளியிடப்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வணிகம் செய்தலை எளிமையாக்குதல் குறியீடு

- ❖ மாநிலங்களுக்கான மத்திய அரசின் வணிகம் செய்தலை எளிமையாக்குதல் குறியீட்டில் ஆந்திரப் பிரதேசம் முதல் மாநிலமாகி உள்ளது.





- ❖ இந்த குறியீடு, இந்திய அரசாங்கத்தின் தொழில்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டிற்கானத் துறை (Department of Industrial Policy & Promotion - DIPP) மற்றும் உலக வங்கி ஆகியவற்றால் இணைந்து தயாரிக்கப்பட்டது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தை அடுத்து அதன் அண்டை மாநிலமான தெலுங்கானா மற்றும் ஹரியானா ஆகியன முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளது.
- ❖ ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் ஆகியன முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- ❖ மத்திய அரசாங்கத்தின் ஒழுங்குமுறை செயல்பாடுகள் மற்றும் சேவைகளை திறமையான, பயனுள்ள மற்றும் தெளிவான முறையில் வழங்குவதை மேலும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- ❖ இந்த வருடம் தொழில்மயமான மாநிலங்கள் எண்ணிக்கையில் குஜராத், மகாராஷ்ட்ரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முதல் ஐந்து இடத்தில் உள்ளன.
- ❖ சீர்திருத்த ஆதார மதிப்பு 95.93% மற்றும் கருத்துக்கணிப்பு மதிப்பு 43.90% யுடன்

தமிழ்நாடு 15வது இடத்தில் உள்ளது.

- 2017-ல் இந்த குறியீடு ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் குஜராத் ஆகியவற்றை சிறப்பாக செயலாற்றும் மூன்று மாநிலங்களாகக் குறிப்பிட்டுள்ளது.

## இந்தியா - 6 வது பெரிய பொருளாதாரம்

- உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பிரான்ஸை விட இந்தியா முன்னேறி மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் (GDP - Gross Domestic Product) உலகில் 6 வது பெரிய பொருளாதாரமாக விளங்குகிறது.
- 2017ஆம் ஆண்டின் முடிவில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி $2.597 டிரில்லியன் ஆகும். பிரான்ஸின் மொத்த உள்நாட்டு உற்பத்தி $ 2.582 டிரில்லியன் ஆகும்.





- இந்தப் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் சீனா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பிரான்ஸின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விஞ்சிய பொழுதும், இந்தியாவின் தனிநபர் வருமானம் பிரான்ஸின் தனிநபர் வருமானத்தை விடக் குறைவானதாகவே உள்ளது. பிரான்ஸின் தனி நபர் வருமானம் இந்தியாவின் தனிநபர் வருமானத்தைப் போல் 20 மடங்கு ஆகும்.
- சர்வதேச பண நிதியத்தின் கணக்கீட்டின் படி இந்தியப் பொருளாதாரம் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் முறையே 7.4% மற்றும் 7.8% வளர்ச்சியடையும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## சீனாவின் பாகிஸ்தானிற்கான இரண்டு தொலை உணர்வு செயற்கைக் கோள்கள்

- நெடும் பயண 2C ஏவுகலத் தளத்தின் மூலம் பாகிஸ்தானின் PRSS - 1 மற்றும் Pak TES - 1 A ஆகிய இரண்டு தொலை உணர்வு செயற்கைக் கோள்களை ஜியூக்வான் செயற்கைக்கோள் ஏவுதள மையத்திலிருந்து சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- மொத்தத்தில் இத்திட்டம் நெடும்பயண ஏவுகலத் தொடரின் 279வது திட்டம் ஆகும். சூரிய ஒத்தியக்க சுற்று வட்டப்பாதை (Sun Synchronous orbit) (அ) தாழ் புவி சுற்று வட்டப்பாதையினுள் (Low Earth Orbit) செயற்கைக் கோளை அனுப்புவதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- 1999-ல் மோட்டோரோலாவின் இரிடியம் செயற்கைக் கோள்களை சுற்று வட்டப்பாதைக்கு எடுத்துச் செல்லப்பட்டப் பிறகு ஏறத்தாழ இருபது வருடங்களில் செலுத்தப்பட்ட முதல் சர்வதேச வணிகரீதியான ஒரு திட்டம் இது ஆகும்.
- PRSS - 1, பாகிஸ்தானுக்கு விற்கப்பட்ட சீனாவின் முதல் ஒளியியல் தொலை உணர்வு செயற்கைக்கோள் ஆகும்.




- இதனால் இரவு மற்றும் பகல் நேர கண்காணிப்பை செய்து முடிக்க முடியும். மேலும் இது மேகங்கள் நிறைந்த நிலையிலும் காணும் திறனைக் கொண்டுள்ளது.
- PakTES - 1 A, பாகிஸ்தானின் விண்வெளி நிறுவனம் SUPARCO-ன் பொறியாளர்களினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அறிவியல் செயற்கைக் கோள் ஆகும். (SUPARCO - Space and Upper Atmosphere Research Commission).
- இந்த செயற்கைக் கோள்கள் 50 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான சீனா-பாகிஸ்தானின் பொருளாதார பெருவழிப்பாதைக்கு (China-Pakistan Economic Corridor CPEC) விண்வெளி தொலை உணர்வு தகவல்களை வழங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேற்குத் தொடர்ச்சி மலை - 4வது சிறந்த சுற்றுலாத் தளம்

- பெருவெப்ப பல்லுயிர் வனப்பகுதிகள் மற்றும் யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னங்களில் இந்தியாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையும் ஒன்றாகும். தனித்த கோள்களின் தரவரிசைப் பட்டியலான '2018-ல் ஆசியாவில் சிறந்தது' என்ற பட்டியலில்

மேற்குத் தொடர்ச்சி மலை நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.




- '2018-ல் ஆசியாவில் சிறந்தது' என்பது ஒரு ஆண்டில் ஒரு கண்டத்தில் சிறந்த பயண இலக்குகளின் 10 சிறந்த பயண இலக்குகளைக் கொண்ட பட்டியல் ஆகும்.
- பூக்கும் தாவர இனங்களில் ஒன்றான நீலக் குறிஞ்சி (Strobilanther Kunthiana) 12 வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும். இது பிரபலமான மூணாரின் மலைத் தொடரில் பூக்கத் தொடங்குகிறது. இது அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - நாகசாகி - ஜப்பான்
    - சியாங் மாய் - தாய்லாந்து
    - லும்பினி - நேபாளம்
    - அருகம் பே - ஸ்ரீலங்கா
    - சிச்சுவான் மாகாணம் - சீனா மற்றும்
    - கோமோடோ தேசியப் பூங்கா - இந்தோனேஷியா

ஆகியவை பட்டியலில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அடுத்து இடம் பெற்ற பயண இலக்குகளாகும்.

# மாநிலச் செய்திகள்

## அண்ணா உணவகங்கள்

- மிகவும் எதிர்ப்பார்க்கப்பட்ட அண்ணா உணவகங்களை மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஆந்திரப் பிரதேச முதல்வர் N.சந்திரபாபு நாயுடு தொடங்கி வைத்தார்.
- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிமைப்பொருள் வழங்கும் துறை ஆகியவற்றுடன்

இணைந்து அக்ஷய பாத்திரா பவுண்டேஷன் இத்திட்டத்தினை அமல்படுத்தி உணவுகளை வழங்குகிறது.

## ‘சீமா தர்ஷன்’ திட்டம்

- பானாஸ்கந்தா மாவட்டத்திலுள்ள சூய்கம் அருகேயுள்ள நாதாபெட்டில் 39 கோடி ரூபாய் மதிப்பிலான ‘சீமா தர்ஷன்’ அல்லது எல்லையோர சுற்றுலாத் திட்டத்திற்கு குஜராத் முதல்வர் விஜய் ரூபானி முதன்மை ஒப்புதலை அளித்துள்ளார்.
- எல்லையோர சுற்றுலாத் திட்டத்திற்கு குஜராத்தின் தனிப்பட்ட முயற்சியின் மூலம் தேசப்பற்றினை அறிவுறுத்துவதே இந்த நடவடிக்கையின் பின் உள்ள முக்கிய நோக்கம் ஆகும்.
- வாகா எல்லை மாதிரியில் உருவாக்கப்பட்டிருக்கும் இத்திட்டம் அருங்காட்சியகம் மற்றும் அணிவகுப்புத் தளத்தைத் கொண்டது. இது 5000 மக்கள் அமரக்கூடிய அளவிலான அரங்காகும்.

## ‘ஒரு விவசாயி ஒரு மின்மாற்றி’

- மின்சார இழப்பைக் குறைப்பதற்காக மஹாராஷ்டிர மாநில அரசானது ‘ஒரு விவசாயிக்கு ஒரு மின்மாற்றி’ என்ற புதிய திட்டத்தை அடுத்த மாதம் அறிமுகம் செய்ய இருக்கிறது.
- ‘ஒரு விவசாயிக்கு ஒரு மின்மாற்றி’ என்ற புதிய திட்டமானது ஆகஸ்ட் 15 (சுதந்திர தினம்) அன்று அறிமுகப்படுத்தப்படும்.
- அதிக மின்னழுத்த பரிமாற்ற வரிசைக்காக இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட இருக்கிறது. இது தடையில்லா மின்சாரத்தை உறுதி செய்யும்.

# முக்கிய தினங்கள்

## உலக மக்கள் தொகை தினம் - 11 ஜூலை

- மக்கள் தொகை பிரச்சனையின் அவசரம் மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான உலக மக்கள் தொகை தினத்தின் கருத்துரு “குடும்பக் கட்டுப்பாடு என்பது மனித உரிமை” ஆகும்.
- 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டங்கள் அமைப்பின் நிர்வாக மன்றத்தினால் உலக மக்கள் தொகை தினம் தொடங்கப்பட்டது.
- 1987 ஆம் ஆண்டு ஜூலை 11ம் தேதி உலக மக்கள் தொகை தோராயமாக 5 மில்லியனை எட்டியுள்ளதை குறிக்கும் விதமாக பொது நலன் கருதி ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.

# இதரச் செய்திகள்

## சரியாக சாப்பிடுதல் இயக்கம்

- வாழ்க்கை தொடர்பான நோய்களுக்கு எதிர்ப்பு மற்றும் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்த இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்களின் ஆணையமானது 'சரியாக சாப்பிடுதல் இயக்கம்' என்னும் தேசிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. (FSSAI - Food Safety and Standards Authority of India).
- FSSAI ஆனது மேலும் சரியாக சாப்பிடுதல் கருவிப் பெட்டி மற்றும் வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பான மற்றும் சத்துள்ள உணவு பிரச்சாரத்தையும் தொடங்கியுள்ளது.
- இது தன்னார்வ மற்றும் கூட்டு முயற்சியாலான இயக்கமாகும். 'ஆரோக்கியமுள்ளவற்றை சாப்பிடுதல்' மற்றும் 'பாதுகாப்பாக சாப்பிடுதல்' எனும் இரண்டு விரிந்த தூண்களைக் கொண்டதாகும்.
- இது சரியான உணவு மற்றும் உணவுசார் விருப்பங்கள் ஆகியவற்றை மக்களிடம் ஊக்கப்படுத்த தொடங்கப்பட்ட கூட்டு முயற்சியாகும்.

- - - - - - - - - - - - - - -